**வேலூர் மாவட்ட கூடுதல் முதன்மை கல்வி அலுவலர் அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை : திருமதி. எஸ். மணிமொழி, எம்.ஏ., எம்.எட்., எம்.பில்.,**

**ந.க.எண்.1377 /DC3/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்: 29.08.2024**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி வேலூர் மாவட்டம் – சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவர்களுக்கான கலைத்திருவிழா போட்டிகள் (CWSN) குறித்த விரிவான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – சார்பு.

பார்வை : பள்ளிக் கல்வித் துறை, ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மாநில திட்ட இயக்குநரின் கடித ந.க.எண்:2183/ஆ8/கலைத்திருவிழா/ஒபக/2024, நாள்:27.08.2024.

-------

பார்வை 1ல் காணும் இணைச் செயல்முறைகளின்படி, சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவியர்களுக்கான (CWSN) கலைத்திருவிழா போட்டிகள் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேலும் சில வழிகாட்டு நெறிமுறைகள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

- Intellectual Disability (ID), Autism Spectrum Disorder (ASD), Cerebral Palsy (CP) ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கு நடைபெறும் போட்டிகள் EMIS தளத்தில் உருவாக்கப்பட்டுள்ள கலைத்திருவிழா CwSN Module –ன் கீழ் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

- ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகளில் பங்கேற்கும் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களின் படைப்புகள் காணொலிகளாக (video) சார்ந்த பள்ளி தலைமையாசிரியரின் Login மூலம் EMIS-தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான போட்டிகள் அனைத்தும் காணொலியின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்படுவதால், பள்ளி அளவிலான போட்டிகள் நடைபெறும் போதே தெளிவாக காணொலி எடுத்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- காணொலியானது, 5 நிமிடத்திற்கு மிகாமல் இருத்தல் வேண்டும். அதாவது 3 நிமிட கால அளவு கொண்ட போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும் 3 நிமடங்களுக்கு மிகாமலும், அதேபோல் 5 நிமிட கால அளவு கொண்ட போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும் 5 நிமிடங்களுக்கு மிகாமலும் மற்றும் குறிப்பாக 5 நிமிடங்களுக்கு மேலாக கால அளவு கொண்ட அனைத்து போட்டிகளுக்கான ஒவ்வொரு காணொலியும், ஒவ்வொரு மாணவரின் படைப்பினை முழுமையாகவும், தெளிவாகவும் காணும் வகையில் 5 நிமிடத்திற்கு மிகாமலும் தொகுத்து பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- காணொலிகளை உள்ளீடு செய்யும் போது, சார்ந்த பள்ளிக்குறிய Google account-ன் கீழ் உள்ள Google Drive-ல் காணொலிகளை பதிவேற்றம் செய்து அதன் Google Drive-link (url) ஐ மட்டும் copy செய்து anyone with the link -viewer option enable செய்து EMIS தளத்தில் உள்ளீடு செய்யப்படுதல் வேண்டும்.
- வட்டார அளவில் BEO, Supervisor, IE-வட்டார ஒருங்கிணைப்பாளர் மற்றும் 2 ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோர் அடங்கிய ஐவர் நடுவர் குழு சேர்ந்து ஒவ்வொரு பிரிவின்கீழ் உள்ள ஒவ்வொரு போட்டியிலும் முதல் ஐந்து இடங்களை பிடிக்கும் மாணவர்களை தேர்வு செய்து அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுத்து EMIS-ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.
- வட்டார அளவிலான மாணவர்களின் தேர்வானது **24.09.2024 முதல் 26.09.2024** வரை நடைபெற்று அடுத்த நிலைப் போட்டியான மாவட்ட அளவிலான

போட்டிக்கு, ஒவ்வொரு போட்டியிலும் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் காணொலிகளை BEO login- ல், **28-09-2024 க்குள் EMIS-ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.**

- மாவட்ட அளவில் ஒரு நடுவர் குழு அமைத்து (உதவித் திட்ட அலுவலர், IE மாவட்ட ஒருங்கிணைப்பாளர், ஒரு நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர், ஒரு உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர், ஒரு மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்) மாவட்ட அளவில் ஒவ்வொரு பிரிவின்கீழ் உள்ள ஒவ்வொரு போட்டியிலும் முதல் மூன்று இடங்களை பிடிக்கும் மாணவர்களை **14-10-2024 முதல் 16-10-2024** வரை தேர்வு செய்து அடுத்த நிலைப் போட்டியான மாநில அளவிலான போட்டிக்கு தேர்ந்தெடுத்து ஒவ்வொரு போட்டியிலும் தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் காணொலிகளை APO login- ல், **18-10-2024 க்குள் EMIS-ல் உள்ளீடு செய்தல் வேண்டும்.**

**ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான மற்ற போட்டிகள்**

ID, ASD, CP ஆகிய குறைபாடுள்ள மாணவர்களுக்கான பார்வை-1ல் உள்ள இணைச் செயல்முறைகள் பக்கம் எண்-10 & 11-ல் கூறப்பட்டுள்ள தனிப் போட்டிகள் தவிர்த்து, மீதமுள்ள போட்டிகளில் அவர்கள் சக மாணவர்களுடன் பங்கேற்கலாம். அவ்வாறு பங்குபெறும் மாணவர்களின் தகவல்கள் பள்ளியளவில் EMIS தளத்தில் அந்தந்த பிரிவிற்கான போட்டிகளில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

**ID, ASD, CP ஆகிய குறைபாடுகள் தவிர மீதமுள்ள 18 வகையான குறைபாடுடைய மாணவர்களுக்கான போட்டிகள்**

ID, ASD, CP ஆகிய குறைபாடுகள் தவிர மீதமுள்ள 18 வகையான குறைபாடுடைய மாணவர்கள் அனைவரும், அவரவர் பிரிவிலுள்ள அனைத்து போட்டிகளில் சக மாணவர்களுடன் பங்கேற்கலாம். அவ்வாறு பங்குபெறும் மாணவர்களின் தகவல்கள் பள்ளியளவில் EMIS தளத்தில் அந்தந்த பிரிவிற்கான போட்டிகளில் பதிவேற்றம் செய்யப்படுதல் வேண்டும்.

வட்டார மற்றும் மாவட்ட அளவிலான போட்டிகளுக்கான நடுவர்களுக்கு மதிப்பூதியம் ஏதும் வழங்கப்படமாட்டாது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளையும் மற்றும் பார்வையில் காணும் செயல்முறைகளில் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளையும் பின்பற்றி, சிறப்பு கவனம் தேவைப்படும் மாணவ மாணவியர்களுக்கான (CWSN) வட்டார அளவிலான கலைத்திருவிழா போட்டிகளைத் திட்டமிட்டு மேற்கொள்ள அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்களுக்கு (பொ) அறிவுறுத்துப்படுகிறது.

கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்
ஒருங்கிணைந்த பள்ளி கல்வி
வேலூர் மாவட்டம்.

**பெறுதல் :**

1. அனைத்து அரசு தொடக்க நிலை / நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், வேலூர் மாவட்டம்.

**நகல்**

1. முதன்மைக் கல்வி அலுவலர், வேலூர் மாவட்டம்
   அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பலாகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
3. மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
4. அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்கள், வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
5. அனைத்து வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் (பொ), வேலூர் மாவட்டம். (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)